உ
சக்தி துணை



# வழக்கம்பரை
# "அம்பாள் துதி"

ஆக்கியோன்:

திரு. சோ. க. வேலாயுதர் அவர்கள்.

வெளியீடு:

வழக்கம்பரை சன சமூக பஜனைச்சபை
சுழிபுரம்
1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

# " அன்புப் படையல் "

பண்ணாகத்து அன்பர் திரு. சோ. க. வேலாயுதர் அவர்களை யான் பல ஆண்டுகளாக அறிவேன். அவர் ஒரு விழுப்பம் மிக்க பண்பாளன்; புலமை கெழுமிய நற்றமிழ் அறிஞன்; ஆர்வம் நிறைந்த — ஆனால் ஆரவாரம் என்பது அறவே இல்லாத — அடக்கமான சமய, சமூக, ஊழியன்; எல்லாவற்றிற்கும் மேலாக, சிறந்த சிவபக்தன். பக்தர்களுக்கு உளதாகும் மேலான இயல்புகளுள் தலையாயது பணிவுடைமை என்னும் சீரிய பண்பேயாகும். 'நான்' என்னும் முனைப்பு ஒருவனுடைய உள்ளத்தில் தேய்ந்து ஒழிந்த அளவிற்குத்தான் பக்தியும் பணிவும் செழிக்கும். 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்க' வல்லவன் தான் உண்மைத் தொழும்பன்; தூய பக்தன். அகந்தை அலை கொழிக்கும் இன்றைய சமுதாயத்தில், அன்பர் வேலாயுதரைப் போன்ற பணிவிற் கனிந்த — அடக்கமுடைய — இனியவர்களைக் காண்டல் அரிது. இத்தகைய பண்பாளனும் பக்திமானுமாகிய அன்பர் அவர்கள், தன்னடியடைந்தார் யாவர்க்கும் தவறாது அருள் வழங்கும் அன்னையாகிய, வழக்கம்பரை அம்மன் மீது அன்பாற் புனைந்த அரிய இன்தமிழ்ப் பாடல்களைப் படித்துச் சுவைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பாடல்களின் பக்திக்கனிவும், தீந்தமிழ்ப் புனிதக்கமழ்வும், என் உள்ளத்தைமிகவும் கவர்ந்தன. பக்தர்களுடைய உள்ளங்களுக்கு — சிறப்பாக தொல்புரத்து வழக்கம்பரை அம்மனிடத்து ஈடுபாடு உடையஅன்பர்களது உள்ளங்களுக்கெல்லாம் — அவ்வினிய பாடல்கள் அரிய ஆத்மீக விருந்தாகும் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை. தனது குலதெய்வமாகிய அம்மனுக்கு நிவேதித்த 'அன்புப்படையல்' ஆகிய அப்பாடல்களை, இப்போது அன்னையின் பிரசாதமாக எங்களோடு பகிர்ந்து கொள்ள அன்பர் ஆசைப்படுகின்றார் யாம் அதனை அன்போடு ஏற்றுப்பயன் அடைவோமாக.

14—5—81

முதலியார் செ. சின்னத்தம்பி
முன்னாள் வட்டுக்கோட்டை
ஊராட்சி மன்றத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

# எங்கள் கருத்து

நாடும் ஏடும் மற்றும் யாவரும் போற்றத்தக்க நல்ல சமயப் பணிகளைச் செய்து வரும் இயக்கம் வழக்கம்பரை சன சமூக பஜனைச்சபை என்பதை யாவரும் நன்கு அறிவர். சபையினர் கடந்த காலங்களில் செய்யப்பட்ட ஒவ்வோர் பணியும் 'யாவராலும் ஏற்றுப் போற்றப்பட்டுள்ளது.

பலரது வசதிக்கும் தேவைக்கும் ஓர் ஏற்ற இடமாக வழக்கம்பரை அமைந்துள்ளது. யாவரையும் கவர்ந்து அருள் சுரக்கும் அன்னை மகாமாரியம்மன் குடியிருக்கும் இடம் அல்லவா வழக்கம்பரை. அன்னையின் இடத்திலிருந்து எடுக்கும் ஒவ்வோர் காரியமும் சபைக்குப் பெரும் வெற்றியைக் கொடுத்து வருகின்றது. இதனால் தான் போலும் பஜனைச் சபையின் காரியங்கள் யாவற்றையும் யாவரும் ஏற்று வருகின்றனர்.

சக்தி வழிபாட்டில் ஈடுபட்டுள்ள பலர் சக்தியை பல வகையில் போற்றி வணங்கி வருகின்றனர். சிலர் சக்தியின் திருவுருவத்திற்கு பூமாலைகளால் அழகுபடுத்தி அக்காட்சியைக் கண்டுகளிக்கின்றனர். சிலர் பூமாலைகளைப் புனைந்து பாடி வணங்கி மனநிறை வடைகின்றனர். இன்னும் சிலர் தத்தமது வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்றது போல வணங்கி வருகின்றனர்.

கேட்டதை எல்லாம் அன்னை பராசக்தி யாவருக்கும் வாரி வாரி வழங்கிக் கொண்டே இருந்து வருகின்றார். வணங்கும் முறைகள் வேறாக இருந்தாலும் சக்தியை அடையும் வழி ஒன்றேயாகும்.

இந்த வகையில் எங்களோடு ஒருவராக வாழும் அன்பர் திரு. சோ. க. வேலாயுதர் அவர்கள் வழக்கம்பரை மகாமாரித்தாயை மிகவும் மேன்மையுற ஏற்றிப் போற்றிப்பாடிய பாடல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத் தொண்டராகவும் அரச உத்தியோகத்தராகவும் விளங்கும் திரு. சோ. க. வேலாயுதர் பாமாலை புனைவதில் அனுபவம் மிக்கவர். இவர் பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோவில் பரிபாலன சபைச் செயலாளராகவும் மற்றும் பல பொது இயக்கங்களின் நிர்வாகியாகவும் விளங்கி வருகின்றார். புராண படனஉரை கூறுவதில் திறமையுள்ளவராக விளங்கும் இவர் மிகவும் அடக்கமாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வருகின்றார்.

இவரது அடக்கமும் அறிவும் செயலும் எம்மை மிகவும் கவர்ந்துள்ளன. இவரது சிறப்பு எமக்கு மிக்க பெருமையை அளிப்பதாகும். ஆதலால் தான், இவரால் வழக்கம்பரை மகாமாரித்தாய் மேல் பாடப்பட்ட பாடலை நூலாக வெளியிட முன்வந்துள்ளோம்.

சைவம் காக்கும், வளர்க்கும் பணியில் ஓர் முன்னணித் தொண்டாற்ற அன்னை பராசக்தி அருள் நல்க வேண்டும் என அன்னையை நாமும் வேண்டுகிறோம். அன்பரது அம்பாள் துதியை சக்திமேல் சூட்டி யாவரும் இன்புற்று வாழ்வோமாக.

இந்நூலை யாவரும் ஏற்றுப்போற்றிக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். நூல் வெளியீட்டுக்கு வேண்டிய உதவிகள் செய்த யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சன சமூக நிலையம்
வழக்கம்பரை,
சுழிபுரம்.

க. வாமதேவன்.
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## வழக்கம்பரை அம்பாள் துதி

திருச்சிற்றம்பலம்

### காப்பு (வெண்பா)

திருவார் வழக்கம் பரையமருந் தேவி
திருவார் திருவடிகள் போற்ற — குருவாகும்
ஐங்கரனே! முக்கணனே! ஆனை முகத்தானே
நெஞ்சினுளே நிற்பாய் நிறைந்து.

### [ அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ]

பற்பல வளங்க ளீந்து பாரினில் வாழ்வு தந்தே
அற்புத அன்பாய்க் காத்து அருளது அளித்து என்னைச்
சிற்பர யோக வாழ்வில் சீரிதாய் வாழ வைத்தாய்!
நற்றிறப் பேறு பெற்றேன்; நல்வழக் கம்பரைத் தாயே!

சுந்தரத் தோற்றங் கண்டேன், சுகந்தரும் இன்ப மஃதே;
எந்திர வாழ்வு வேண்டேன் ஏழையேற் கருளு வாயே!
அந்தரத் தமரர் போற்றும் அன்னையே! மாரித் தாயே!
மந்திர வடிவே! அன்னாய்! வழக்கம்பரை வாழுந் தேவீ!

மையலாம் வாழ்வில் வீழ்ந்து மயங்கிடும் மக்கள் தம்மைப்
பொய்யெலாந் தவிரச் செய்து, புனிதராய் வாழச் செய்
ஐயனின் இன்பத்தேவி! அவனியைக் காத்து நீயுன் [வாய்!
செய்ய பொற் பாதந் தந்தே செகமதை வாழ்விப் பாயே!

தக்கனின் அகந்தை நீக்கித் தருமத்தை ஓங்கச் செய்தாய்
சொக்கருக் கினிய தேவி சொல்ல வொண் ணாதமாயப்
பொக்கமாம் வாழ்வில் வீழ்ந்து புழுங்கிடா தணைத்துக்காத்
தக்கவர் பயில்வழக்கம் பரைவளர் தாயே! அம்மா! [தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முசுக்கலை ஒன்றி னுக்கு மூதுல களித்தே ஆண்டாய்!
பொசுக்கலைம லங்கள் மூன்றைப்புண் ணியப் பேறுசெய்வாய்
நசுக்கிடா யகந்தை தன்னை நல்ஞான மேநல்கு வாயே!
வசுக்களைக் காத்த தாயே! வழக்கம்பரை வாழுந் தேவீ!

அன்னையே! அழகே இன்ப அமுதமே! அடியேனுக்கு
நின்னையே தந்தாய் என்ருல் நினக்கொரு பயனுமுண்டோ?
பொன்னொடு மணியு மின்பப்போ கமும் வேண்டேன்நின்பா
மன்னெடு மன்பே நல்காய்! வழக்கம்பரை யமருமம்மே! [ல்

எண்ணிலார் கூடி ஏத்தி எழிலுறு முன்றன் தோற்ற
வண்ணமா மழகு பேசி வாய்த்தழும் பேறப் பெற்ருர்
புண்ணிய வாழ்வு மீதே புகலருந் தவஞ்செய் வார்க்கு
ம்ண்ணிலே வாய்த்த தாயே! வழக்கம்பரை வாழுந் தேவீ!

மின்னலைப் பழிக்குஞ் செய்ய மேனியாய்! உன்றன்தோற்றம்
என்னுளே விளங்கித் தோன்ற ஏற்றநற் கருணை செய்தாய்!
கன்னலே! தேனே! இன்பக் கனிதரு கரும்பே அன்னய்!
என்னுனைப் போற்று வேன்யான் எழிலுடை மாரித்தாயே

மக்களின் துயரம் போக்க மகிழ்ந்தினி தமர்ந்து நாளும்
தக்கவர் தங்கட் கெல்லாந் தயாவுட னருளைச் செய்தே
துக்கமாம் வாழ்வை வீட்டித் துயரறு மருளைச் செய்வாய்
சொக்கனின் இன்பத் தேவீ! தொல்புரத் தமர்ந்த தாயே!

பாரெலாம் படைத்தே காப்பாய், பரமனின் பாகத் தாயே
சீரெலாம் பாடத்தொண்டர் சிறப்புடன் வாழச்செய்வாய்
ஊரெலாஞ் செழிக்கச் செய்தே உவப்புடன் காக்கின்ருயே
யாரெலா மறிவார் உன்னை யாதுநான் செப்பி வாழ்வேன்

சிந்தனைக் குன்னைத் தேக்கிச் சீரிய புகழைப் பேசும்
வந்தனை வாழ்வு கண்டேன் வழக்கம்பரை யமர்ந்த தேவி!
எந்துணை அருளைத் தந்தாய் என்றுநான் வாடும் போது
சுந்தர அருளே தந்தேன் எனச்சொ லும் மாற்றங்கேட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல பிறப்பிற் செய்த பழம்பெருந் தவத்தி னால்நின்
அற்புதக் கோலங் கண்டேன்! அதனை நான் மறந்துய்வேனோ?
சிற்பரர் பரையைச் சேர்ந்த சிவனுஞ் சிவனே யன்றோ!
கற்றவர்க் கருளும் நல்ல வழக்கம்பரை அமர்ந்த தாயே!

எண்ணிலா ருன்னைக் காண ஏங்கியே தவிக்கும் போது
மண்ணிலே வைத்து என்னைமாண்புடன் காத்தே ஆண்டாய்
புண்ணியப் பேறுபெற்றேன்! போற்றினே னுன்னை நாளும்
வண்ணமாம் வாழ்வுதந்தாய்! வழக்கம்பரை யமர்ந்ததேவீ!

திருநெறிய தமிழ்தந்த திருப்பெருகு ஞானசம்பந்தன் அந்
ஒரு தனிநல் அம்மே! என்ன உவப்புடன் ஓடி வந்தே [நாள்
மருவினிய ஞானப்பாலை மகிழ்வுடனூட்டி மேலைக்
கருவினின் துயரம் போக்கிக் காதலாற் பாடச் செய்தாய்.

வேண்டுவார் வேண்டு மெல்லாம் விரைந்தளித் தவரை யெல்லாம்
ஆண்டருள் செய்யுமம்மை அருள் நிலை அறிவார் யாரே?
தூண்டிடா விளக்காய் ஞானச் சுடர் விடுந் தேவீ அன்பு
பூண்டுளோற் குநீயே யல்லாற் பூதலத் தெவரே யுள்ளார்?

துய்ய நான் மறைக ளானுந் துதித்திடற் கரிய தாயே
பொய்ம்மையாம் வாழ்விற் போந்து உழன்றிட அடியனேனை
கையனேன் முன்னாட் செய்த கன்மங்கள் போக்கித்தீய[னைக்
மையல்வாழ் விதனை நீக்கி வருகவென்றருளு வாயே!

ஒளிவளர் வாழ்வு வேண்டி ஓங்கருந் தவஞ்செய் வார்க்குக்
களிதரு மின்ப வாழ்வைக் களிப்புடனீந்தே நாளும்
அளியுட னளுந்தாயே! ஆருனை அறிய கிற்பார்?
கிளியுறழ் மொழியினளே! கிளர் வழக்கம்பரைத் தாயே!

தேரேறி வீற்றி ருக்குந் திருக்கோலங் கண்டு போற்ற
ஊர்தோறு மிருக்கு மக்கள் ஒருமித்து வந்து சேர்ந்தே
நேர்கண்டு தொழுவார்க் கெல்லாம் நிறையருள் செய்யுந் தாயே
பார்பதியே! பகவதியே! வழக்கம்பரை யமர்ந் தருளுந்தேவீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் கரியாய் போற்றி! சீருடைக் கழலாய் போற்றி!
வந்தெமக் கருள்வாய் போற்றி! வாழ்வது தருவாய் போற்றி!
புந்தியில் இருப்பாய் போற்றி! போகம தருள்வாய் போற்றி!
நந்தியின் தேவி போற்றி! நாண்மலர் போற்றி போற்றி!

பந்தம தில்லாய் போற்றி! பகவதி யானுய் போற்றி!
சிந்தையி லுறைவாய் போற்றி! சீருடை உமையே போற்றி!
எந்தமை ஆள்வாய் போற்றி! ஏறுடை முதல்வி போற்றி
வந்தெமை ஆண்டாய் போற்றி! மலரடி போற்றி போற்றி!

(வெண்பா.) நூற்பயன்

வேலா யுதனுரைத்த வீறோங்கு சத்திதுதி
மேலோங்க என்றும் விளம்பினுல் — ஏலாத
எக்கருமமும் மில்லை எம்சத்தி தான்வந்து
புக்கமரு முன்னேநீ போற்று.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்

# நன்றி

வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபைச் செயலாளராகக் கடமையாற்றுபவரும், சமய நூல்களை வெளியிட்டுத் தொண்டாற்றுபவரும், அம்பாளின் பாடல்களை அச்சிட்டு வெளியிட மனமுவந்து முன்வந்தவருமான திரு. க. வாமதேவன் அவர்களுக்கும், அணிந்துரை தந்துதவிய செந்தமிழ்ச் செல்வர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்களுக்கும், பாடல்களைச் சரிபார்த்துதவிய அறிஞர்களுக்கும், இப்புத்தகத்தை அச்சிட்ட யாழ்ப்பாணம், ஸ்ரீ முருகன் அச்சகத்தாருக்கும், அம்பிகையின் திருவருளாலான பாக்களைப் படித்து அன்னையின் அருள்நோக்கம் பெற்று இன்புறும் அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

பண்ணாகம்,
சுழிபுரம்.

அன்பன்
சோ. க. வேலாயுதர்.

---

ஸ்ரீ முருகன் அச்சகம், யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org